### ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில்

# மேலும் ஓர் இடத்தில் மண் உள்வாங்கியது

### சாலைப் போக்குவரத்துக்கு மூடப்பட்டது

கோலாலம்பூர், ஆக. 29-

கடந்த வெள்ளிக்கிழமை ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் மண் உள்வாங்கிய சம்பவம் நிகழ்ந்த வேளையில், அங்கிருந்து 50 மீட்டர் தூரத்தில் நேற்றுப் பின்னிரவு 2.30 மணியளவில் மற்றொரு மண் உள்வாங்கும் சம்பவம் நிகழ்ந்தது. நேற்று முன்தினம் தலைநகரில் கனத்த மழை பெய்ததைத் தொடர்ந்து அப்பகுதியில் மீண்டும் மண் உள்வாங்கும் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதனைத் தொடர்ந்து அப்பகுதி அனைத்து வாகனங்களுக்கும் மூடப்பட்டது. அப்பகுதியில் போலீஸ் காவலில் அமர்த்தப்பட்டுள்ளனர். அப்பகுதியில் நடமாடுவதற்கு பொதுமக்கள் அனுமதிக்கப் படவில்லை.

இதனைத் தொடர்ந்து தாங்கள் இண்டாவாட்டர் நிறுவனத்துடன் இணைந்து உடனடி நடவடிக்கையில் இறங்கியதாக கோலாலம்பூர் மாநர் மன்றம் நேற்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் கூறியது.



அப்பகுதியிலுள்ள இண்டாவாட்டர் குழாய்கள் உட்பட இதர குழாய்களில் நீர்க்கசிவு ஏதும் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராயுமாறு இண்டாவாட்டர் நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறியது.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் இதுபோன்ற சம்பவம் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்த கோலாலம்பூர் மாநகர் மன்றமும் இண்டாவாட்டர் நிறுவனமும் உரிய நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷரிப் கூறினார்.

கோலாலம்பூர் மக்களின் நலன் உட்பட அவர்களின் பாதுகாப்புக்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் முழு உத்தரவாதம் வழங்கும் எனவும் அவர் கூறினார். பொதுமக்களின் நலன் கருதி ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதி தொடர்ந்து பாதுகாப்பாக இருப்பதற்கு அது உரிய நடவடிக்கையில் இறங்கும் எனவும் அவர் உறுதி கூறினார்.

இதனிடையே நேற்று முன்தினம் கனத்த மழை பெய்ததைத் தொடர்ந்து இரவு 7.30 மணி அளவில் மீட்புப் பணிகள் நிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது. இதனிடையே நேற்றுக் காலை 8.00 மணி அளவில் போலீஸ், தீயணைப்பு-மீட்புப்படை கோலாலம்பூர், மாநகர் மன்றம், பொது தற்காப்புப்படை ஆகியோர் களத்தில் இறங்கி மீட்புப்பணியைத் தொடங்கியதைக் காண முடிந்தது. ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நேற்றுப் பின்னிரவு இரண்டாவது முறையாக மண் உள்வாங்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து மஸ்ஜிட் இந்தியா பள்ளிவாசல் முதல் ஜாலான் பூனுசில் உள்ள மே பேங்க் வரை போலீஸ் படையின் மஞ்சள் தடுப்புப் பட்டை கட்டப்பட்டிருந்தது.

எனினும் அப்பகுதியில் பொதுமக்கள் நடந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனிடையே அப்பகுதியில் மேலும் சில சாலைகளை மூடுவது குறித்து தற்போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக டாங் வாங்கி மாவட்டப் போலீஸ் தலைவர் சுலிஸ்மி அஃபாண்டி சுலைமான் கூறினார். இது தொடர்பான விவகாரங்கள் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த மண் உள்வாங்கும் சம்பவத்தில் இந்தியாவைச் சேர்ந்த விஜயலெட்சுமி (வயது 48) காணாமல்போனார். அவரைத் தேடும் பணி இன்று 7ஆவது நாளாகத் தொடரப்பட்டு வருகிறது.